# அமாவாசை – ஆகஸ்ட் – 2017

# சாட்சியங்கள்

**1. சிறியபுஷ்பம் - கனக்கன்குப்பம்**

மகள் ஏஞ்சல் ஜெயந்திக்கு மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்த்தோம். மருத்துவர்கள் என் மகளின் உயிருக்கு உறுதி தரவில்லை. நான் எம்மாவுஸ் ஆண்டவரிடம் அழுது மன்றாடினேன். ஆண்டவரே என் மகளின் உயிரை காப்பாற்றினால் நான் சாட்சி சொல்கிறேன். என்று வேண்டிக்கொண்டேன். அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடந்து, என் மகளின் உயிரை காப்பாற்றிய ஆண்டவருக்கு கோடான கோடி நன்றி!

**2. ஆரோக்கிய அந்தோணி - விருத்தாசலம்**

எனக்கு நான்கு மாதங்களாக காதில் இரத்தமும் சீழ்மும் வடிந்துக் கொண்டே இருந்தது. மருத்துவரிடம் சென்றும் குணமாகவில்லை. நான் அமாவாசை ஜெபத்தில் கலந்துக் கொண்டு வேண்டிக்கொண்டேன். இப்போது குணமடைந்துவிட்டது. வெளி மாநிலத்தில் வேலை செய்யும் இடத்தில் சகவேலையாட்களால் எனக்கு அதிகமான பிரச்சனைகள் இருந்தது. எனக்கான வேலையை எனக்கு தராமல் என்னை பணி செய்ய விடாமல் தடுத்து வந்தார்கள். நான் ஆண்டவரிடம் வேண்டிக்கொண்டேன். இரண்டாம் நாளிலே என் மேல் அதிகாரி என்னிடமும் மற்றவர்களிடம் பேசி, நான் என் பணியை பிறரின் தலையீடு இல்லாமல் செய்ய வழிச் செய்தார். என் மன்றாட்டைக் கேட்ட எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**3. லவரண்சியா - இருந்தை**

சென்ற வாரம் எனக்கு இருதயவலி வந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். அங்கு சிகிச்சைக்காக ரூ.10,000 கேட்டார்கள் அப்போது அவ்வளவு தொகை எங்களிடம் இல்லை பின்பு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். என் மகள் எனக்கு எம்மாவுஸ் ஆண்டவரின் எண்ணெய்யும், தண்ணீரையும் குடிக்க கொடுத்தார்கள் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். ஒரே வாரத்தில் நலமடைந்து வீட்டுக்கு வந்துவிட்டேன். எந்தவித பெரிய பாதிப்புக்கள் இல்லாமல் என்னை குணமாக்கிய எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**4. ஜாக்குலின் - இருதயபுரம்**

எனக்கு இடுப்பில் அதிகமான வலி இருந்துக் கொண்டே இருந்தது. இரண்டு ஆண்டுகளாக நடக்க முடியாமல் இருந்தேன். மருத்துவமனையில் பரிசோதித்து பார்த்ததில் ஜவ்வு தேய்ந்து போய்விட்டது என்று கூறினார்கள் அறுவைசிகிச்சை செய்ய வேண்டுமென்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். நான் அமாவாசை ஜெபக்கூட்டத்தில் வேண்டிக்கொண்டேன். எம்மாவுஸ் எண்ணெய்யை தினமும் கால்களில் தடவி வந்தேன். இப்போது எந்தவித சிகிச்சையும் இல்லாமல் குணமடைந்துவிட்டேன். என்னை குணமாக்கிய எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**5. மேரி - அழகப்பசமுத்திரம்**

இரண்டு வருடங்களாக குடும்பத்தில் அதிக கடன் பிரச்சனையாக இருந்தது. நிலத்தை விற்று கடன் அடைக்க முடிவு செய்தும் நிலம் விற்பனையாகமல் இருந்தது. நான் அமாவாசை ஜெபத்தில் கலந்துக் கொண்டு உருக்கமாக வேண்டிக் கொண்டேன். இப்போது நிலத்தை நல்ல விலைக்கு விற்று என் கடன்கள் அனைத்தையும் அடைத்துவிட்டேன். என் மகனுக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டேன். ஆண்டவர் ஆண் குழந்தையை கொடுத்து ஆசீர்வதித்தார். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**6. அந்தோணியம்மாள் - புள்ளம்பாடி**

10 வருடங்களாக என் மகளுக்கு வேலை கிடைக்காமல் இருந்தது. ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வேண்டிக்கொண்டே வந்தேன். இப்போது என் மகளுக்கு வேலை கிடைத்து ஆசிரியராக பணியாற்றி வருகிறார். என் மகளின் வாழ்வை ஆசீர்வதித்த ஆண்டவருக்கு நன்றி!

**7. ஜென்சி - புதுச்சேரி**

என் கணவரின் சகோதரிக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்த்தார்கள். மூன்று மாதங்களாக சிகிச்சை அளித்தும் என்ன நோய் என்றே கண்டுபிடிக்க முடியவில்லை. நான் எம்மாவுஸ் ஆண்டவரின் எண்ணெய்யையும், உப்பு கலந்த தண்ணிரையும், ஒவ்வொரு நாளும் குடிக்க கொடுத்தேன். இப்போது உடல் நலம் பெற்று வீடு வந்து சேர்ந்துவிட்டார்கள். குணமளித்த எம்மாவூஸ் ஆண்டவருக்கு நன்றி!

**8. ஆனந்தி - வித்தாசலம்**

எனக்கு வயிற்று வலி இருந்தது. மருத்துவமனை சென்று பரிசோதித்து பார்த்ததில் கிட்னியில் கல் இருப்பதாக கூறினார்கள். அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினார்கள். சிகிச்சை செய்வதற்க்கும் உடலில் போதுமான இரத்தம் இல்லை என்றும் கூறிவிட்டார்கள். நான் எம்மாவுஸ் ஆண்டவரிடம் வேண்டிக்கொண்டு, தொடர்ந்து எண்ணெய் குடித்து வந்தேன். இப்போது அறுவைசிகிச்சை இல்லாமலே குணமடைந்துவிட்டேன். என்னை குணமாக்கிய ஆண்டவருக்கு நன்றி!

**9. லில்லி திரேசா - கடம்பூர்**

நான் வாகனத்தில் செல்லும் போது விபத்து ஏற்பட்டு நடுசாலையில் தூக்கி வீசப்பட்டேன். பலத்தகாயத்துடன் சுயநினைவின்றி இருந்தேன். என்னை பார்த்தவர்கள் நான் இறந்துவிட்டதாகவே கூறிவிட்டார்கள். இரண்டு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க மறுத்துவிட்டார்கள். அப்போது என் மகள் எம்மாவுஸ் ஆண்டவரே யாருடைய ஆதரவும் இல்லாமல் இருக்கும் எனக்கு என் தாய்தான் ஆதரவு என் தாயின் உயிரை காப்பாற்றுங்கள் என்று நம்பிக்கையாக வேண்டிகொண்டார். பிறகு வேறொரு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு காப்பாற்றப்படேன். என் உயிரை காப்பாற்றிய எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!